அசல்

2.9.01 பாண்டித்துரை

அசல் -1

திருச்சிற்றம்பலம்.

மகா-ள-ள-ஸ்ரீ வே சாமிநாதையர்

அவர்கட்கு.

ஐய,

நிகழாநின்ற பிலவஞ்ரு வைகாசிமீ யிகவை யாகிய 1901ஞ்ரு மேமீ 24உ முதல் மதுரையில் ஓர் தமிழ்ச்சங்கம் சேந்தமிழபிவிர்த்தியின் பொருட்டு நடத்த நிச்சயிக்கப்பெற்றுள்ளது. இதன் கருத்தினை, உடன் வரும் பத்திரிகைவாயிலாய் நன்றறியலாகும். தமிழபிமானிகளாகிய தாங்கள், இச்சங்கத்தின் தலைவித்வத் அங்கத்தில் ஒருவராகவிருந்து தமிழ்ப்பாஷாபிவிர்த்திக்காய உதவிகளைப்புரிந்து ஆதரித்து வருதற்குத் தங்கள் சம்மதத்தையளிக்க மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
பாண்டித்துரை
அக்கிராசனாதிபதி.

தமிழ்ச்சங்கம்,
மதுரை.
2—9—01.

அதிகம்

2.9.01 பாண்டித்துரை

அகம் - 1